# க.பொ.த(சா/தர)ப் பரீட்சைகளில் அடைவு மட்டத்தை அதிகரிப்பதிலுள்ள பிரச்சினைகள்

## புத்தளம் மாவட்ட தமிழ் மொழிமூலப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட - ஓர் ஆய்வு

முஹம்மட் பாறூக் முஹம்மட் றியாஸ்
பதிவு இல. EU/PGS/2007/MED/07

MED05
Thesis
Library - EUSL
LIBRARY
12 OCT 2009
Eastern University, Sri Lanka.

பட்டப்பின் கல்வி முதுமாணிக் கற்கையின் பகுதித் தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு இலங்கை, கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு கலை கலாசார பீடத்தின் கல்வி,பிள்ளை நலத்துறையினூடாக இவ் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டது.

கல்வி,பிள்ளை நலத்துறை,
கலை கலாசார பீடம்,
இலங்கை,கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை,செங்கலடி,இலங்கை.

**2008**

PROCESSED
Main Library, EUSL

# ஆய்வுச் சுருக்கம்

"க.பொ.த(சா/தர)ப் பரீட்சைகளில் அடைவு மட்டத்தை அதிகரிப்பதிலுள்ள பிரச்சி னைகள் " எனும் இவ்வாய்வானது, புத்தளம் மாவட்டத்திலுள்ள தமிழ் மொழிமூலப் பாட சாலைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படடுள்ளது.இலங்கையின் பொதுக் கல்வி முறையில் மிகமுக்கியத்துவம் வாய்ந்து விளங்கும் "க.பொ.த (சா/தர)ப் பரீட்சை களில் மாணவர்களின் அடைவுமட்டம் குறைவாக இருப்பதற்குரிய காரணத்தை அடிப் டையாகக் கொண்டு இது ஆராயப்பட்டுள்ளது

"க.பொ.த(சா/தர)த்தில் வருடாந்தம் தோறும் 50% வீத்திற்கும் அதிகமானோர் சித்தியடையாத நிலமையானது நாட்டின் சமகாலக் கல்விப் பிரச்சினை களுள் முக்கிய ஓர் எழுவினாவாக விளங்குகிறது.ஆகவே இவ் எழுவினாவானது இங்கு ஆய்வுக்கு உட்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது.ஆய்வின் குறிக்கோள்கள்,ஆய்வு வினாக்கள் மற்றும் தரவுகளின் இயல்புகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இது ஓர் அளவைசார் ஆய்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வறிக்கை ஆய்வு முறையியல் ஒன்றின்கீழ் ஆறு அத்தியா யங்களாக கட்டமைக்கப்பட்டுள்ளது.முலாவது அத்தியாயம் ஆய்வினுடைய அறிமுக மாகும். இரண்டாவது இலக்கிய மீளாய்வு அத்தியாயமாகும்.மூன்றாவது ஆய்வு முறை யியல் பற்றிய அத்தியாயமாக அமைந்துள்ளது. நான்காம்,ஐந்தாம் அத்தியாயங்கள் தரவுகளின் பகுப்பாய்வையும்,விளக்கங்களையும் உள்ளடக்கியுள்ளன. இறுதி ஆறாவது அத்தியாயம் ஆய்வின் கண்டறிதல்கள்,விதந்துரைகள் பற்றியதாகும். உசாத்துணை களும், பின்னிணைப்புக்களும் இவ்வறிக்கையின் பிற்சேர்க்கையாக அமைந்துள்ளன.

அறிமுக அத்தியாயம்,ஆய்வின் பின்னணி,முக்கியத்துவம்,ஆய்வின் குறிக்கோள்கள்,ஆய்வு வினாக்கள்,ஆய்வின் நியாயப்பாடு மற்றும் ஆய்வின் வரைய றைகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.சா/தரப் பரீட்சைகளில் மாணவர்களின் அடைவுமட்டம் தாழ்வாக இருப்பதற்குரிய பாடசாலைகளின் தொழிற்பாட்டு ரீதியிலான காரணிகளை காரணகாரிய அடிப்படையில் கண்டறிய முயற்சித்துள்ளதுடன்,அடைவு மட்டத்தை மேலும் அதிகரிப்பதற்குரிய வழிவகைகளையும் ஆராய்கின்றது.

இலக்கிய மீளாய்வில்,கல்வி அடைவுமட்டம் குறித்த கோட்பாட்டு அடிப்படை,கல்வி அடைவுமட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மற்றும் க.பொ.த(சா/தர)ப் பரீட்சை அடைவுடன் தொடர்புடைய முன்னைய ஆய்வுகள் பற்றிய விபரங்களை விளக்குகின்றது..அடைவுமட்டத்தில் செல்வாக்குச் செலுத்துகின்ற மாணவர்கள், ஆசிரியர்கள்,பாடசாலை முகாமை,பெற்றோர்கள் மற்றும் குடும்ப சமூகக் காரணிகளுடன் தொடர்புடைய உள்நாட்டு,சர்வதேச ஆய்வுகளின் கண்டறிதல்களும்,முடிவுகளும் தரப்பட்டுள்ளன.

மூன்றாவது அத்தியாயத்தில் ஆய்வுமுறையியல் பற்றி விளக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு புத்தளம் மாவட்டத்திலுள்ள சா/தர வகுப்புக்கள் காணப்படும் 54 தமிழ் மொழிமூலப் பாடசாலைகள் என்ற குடித்தொகையிலிருந்து,தேசிய,1AB மற்றும் II ஆம் வகைப் பாடசாலைகளுள் 28 பாடசாலைகள் மாதிரிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. வினாக்கொத்துகள்,நேர்காணல் படிவங்கள் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நான்காம்,ஐந்தாம் அத்தியாயங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பகுப்பாய்வுகளின்படி க.பொ.த(சா/தர)ப் பரீட்சை அடைவு குறித்த செல்நெறிகளை தேசிய ரீதியாகவும்,மாவட்ட அடிப்படையிலும் ஒப்பிடும்போது தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் வீழ்ச்சிநிலை தென்படுகிறது.அத்துடன் பாடசாலை வகை அடிப்படையில் அடைவுமட்டங்களில் வேறுபாடுகளுண்டு.மாணவர்களது அடைவுமட்டம் தாழ்நிலையிற் காணப்படல் மற்றும் அடைவுமட்டத்தை அதிகரித்தல் தொடர்பில் மாணவர்கள்,பாடசாலை, ஆசிரியர்கள்,பெற்றோர் மற்றும் குடும்ப சமூகப் பொருளாதாரக் காரணிகள் தொடர்பான மாறிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளது.ஆறாவது அத்தியாயம் இவற்றை விளக்குகின்றது.அடைவுமட்டத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் விதந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.அவை மாணவர் சார்பாக மட்டுமன்றி பெற்றோர்,பாடசாலை,ஆசிரியர்கள் மற்றும் கல்வித் திணைக்களத்தினர் ஆகியோர் சார்பானவையாகும்.இந்த ஆய்வானது புத்தளம் மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாயினும் இது பரந்தளவில் எமது கல்வித்துறையில் பயனளிக்கக்கூடியது என்பது ஆய்வாளரின் எதிர்பார்ப்பாகும்.

# பொருளடக்கம்



| விடயத்தலைப்பு | பக்கம் |
|---|---|
| ஆய்வாளரின் உறுதியுரை.................. | i |
| மேற்பார்வையாளரின் சான்றுரை........... | ii |
| நன்றியுரை.................................... | iii |
| ஆய்வுச் சுருக்கம்............................. | iv – v |
| பொருளடக்கம்.................................... | vi – vii |
| அட்டவணைகளும் வரைபுகளும்........... | viii –x |
| குறியீட்டுச் சொற்களின் விளக்கம்.......... | xi |
| **அத்தியாயம் ஒன்று – அறிமுகம்** | **(1 – 8)** |
| 1.1 ஆய்வின் பின்னணி | 1 – 2 |
| 1.2 ஆய்வின் முக்கியத்துவம் | 2 – 3 |
| 1.3 ஆய்வின் குறிக்கோள்கள் | 4 |
| 1.4 ஆய்வு வினாக்கள் | 5 |
| 1.5 ஆய்வின் நியாயப்பாடு | 6 – 7 |
| 1.6 ஆய்வின் வரையறைகள் | 7 – 8 |
| **அத்தியாயம் இரண்டு - இலக்கிய மீளாய்வு** | **(9 – 21)** |
| 2.0 அறிமுகம் | 9 |
| 2.1 கல்வி அடைவுமட்டம் குறித்த கோட்பாட்டு அடிப்படை. | 9 – 11 |
| 2.2 கல்வி அடைவுமட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள். | 11 – 17 |
| 2.3 க.பொ.த (சா/தர) அடைவுமட்டம் தொடர்பான முன்னைய ஆய்வுகள். | 17 – 21 |
| **அத்தியாயம் மூன்று – ஆய்வு முறையியல்** | **(22–33)** |
| 3.0 அறிமுகம் | 22 |
| 3.1 ஆய்வுக்கான திட்டமிடலும் ஆய்வு முறைமையும் | 22 – 24 |
| 3.2 ஆய்வுக் குடித்தொகையும் பரம்பலும் | 24 – 26 |
| 3.3 மாதிரித் தெரிவு முறையமைப்பு | 26 – 27 |
| 3.4 தரவுசேகரித்தல் கருவிகளும் நுட்பங்களும் | 27 – 30 |
| 3.5 ஆய்வுக்கான படிமுறை ஒழுங்கு | 30 – 33 |
| **அத்தியாயம் நான்கு–தரவுகளின் பகுப்பாய்வுகளும் விளக்கங்கங்களும் -I** | **(34–66)** |
| 4.0 அறிமுகம் | 34 |
| 4.1 ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள மாதிரிகளின் விளக்கம். | 34 – 38 |
| 4.2 ஆவணங்கள் மூலமாகப் பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு. | 39 – 42 |
| 4.3 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிவிபர வினாக்கொத்துப் பகுப் பாய்வு. | 42 – 66 |

| | |
|---|---|
| **அத்தியாயம் ஐந்து- தரவுகளின் பகுப்பாய்வுகளும் விளக்கங்கங்களும் -II** | **(67 –108)** |
| 5.0 அறிமுகம் | 67 |
| 5.1 பாடசாலை மாணவர்களுக்கான வினாக்கொத்துப் பகுப்பாய்வு | 67 – 76 |
| 5.2 பாடசாலை ஆசிரியர்கள்/வகுப்பாசிரியர்களுக்கான வினாக்கொத்துப் பகுப்பாய்வு | 76 – 88 |
| 5.3 பாடசாலை அதிபர்களுக்கான நேர்காணல் தரவுகளின் பகுப்பாய்வு | 89 – 98 |
| 5.4 பெற்றோர்களுக்கான நேர்காணல் தரவுகளின் பகுப்பாய்வு | 99 –108 |
| **அத்தியாயம் ஆறு – கண்டறிதல்களும் விதந்துரைகளும்** | **(109–120)** |
| 6.0 அறிமுகம் | 109 |
| 6.1 கண்டறிதல்களும் முடிவுகளும் | 109 – 115 |
| 6.2 விதந்துரைகளும் ஆலோசனைகளும் | 115 –118 |
| 6.3 முடிவுரை | 119 –120 |
| **உசாத்துணைகளின் பட்டியல்** | **(121– 123)** |
| **பின்னிணைப்புக்கள்** | **(124 –126)** |
| **பின்னிணைப்பு - I** | 124 – 125 |
| **பின்னிணைப்பு - II** | 126 – 128 |
| **பின்னிணைப்பு - III** | 129 – 130 |
| **பின்னிணைப்பு - IV** | 131 – 133 |
| **பின்னிணைப்பு - V** | 134 – 136 |
| **பின்னிணைப்பு - VI** | 137 – 138 |
| **பின்னிணைப்பு - VII** | 139 |
| **பின்னிணைப்பு - VIII** | 140 |